**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**<u>2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் வியாழகிழமை</u>**

<u>O.S. 104/2024</u>

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணசுந்தரம் | தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| த/பெ | : | கணபதி | கிராமம் | : | கமலாபுரம் |
| ஜாதி | : | | தொழில் | : | விவசாயம் |
| சமயம் | : | | வயது | : | 60/25 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

என் தகப்பனார் பெயரிலுள்ள கடந்த 16.06.1964 தேதிய திருவாரூர் சார்பதிவக அலுவலக **கிரய ஆவண எண்628/1964 – அசல் வா.சா.ஆ.1** ஆகவும், என் தகப்பனார் கணபதியாபிள்ளையின் **இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடப்பட்ட நகல் வா.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்திற்கு கடந்த 01.01.1967 முதல் 31.12.1974 வரையிலான காலத்திற்குண்டான கூத்தாநல்லூல் சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட 20.07.2021 தேதிய **வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ.3 ஆகவும்,** கடந்த 01.01.1950 முதல் 31.12.1974 வரையிலான காலத்திற்கு கூத்தாநல்லூர் சார்பதிவாளர்

அலுவலகத்தில் வழங்கப்பட்ட 25.04.2024 தேதிய **வில்லங்க சான்று - அசல் வா.சா.ஆ.4** ஆகவும், கடந்த 01.01.2000 முதல் 05.09.2024 வரையிலான காலத்திற்கு 06.09.2024 தேதியில் வழங்கப்பட்ட தாவா சொத்திற்கான **வில்லங்க சான்று - கணினி நகல் வா.சா.ஆ.5** ஆகவும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட 02.03.2023 தேதிய பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.330/2023-ன் **சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6** ஆகவும், நான் 1 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் **அறிவிப்பு - அலுவலக நகல் அசல் அஞ்சல ரசீதுகளுடன் கூடியது வா.சா.ஆ.7** ஆகவும், திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (விடுமுறை கால நீதிமன்றம்) தாக்கல் செய்யப்பட்ட **கேவியட் மனு - சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8** ஆகவும், தாவா சொத்திற்குரிய **சிட்டா - கணினி நகல் வா.சா.ஆ.9** ஆகவும், குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.24 17:02:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்